# அம்மா மக்கள் முன்னேற்றக் கழக

## பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

---

06.08.2023 – ஞாயிற்றுக் கிழமை

ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபம்
சென்னை, வானகரம்

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

| தீர்மானம் எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி அம்மா ஆகிய பெருந்தலைவர்களை வணங்குகிறோம். அவர்களின் லட்சியங்களை முன்னெடுத்துச் செல்லும் கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் வழிகாட்டுதலில் தொடர்ந்து பணியாற்றுவோம்! | 1 |
| 2. | சவால்களைக் கடந்து கழகத்தை வழிநடத்தும் கழக பொதுச்செயலாளருக்கு நன்றிகள்! | 2 |
| 3. | கழக ‘மாணவர் அணி’, ‘மாணவியர் அணி’ உருவாக்கம் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலப் பிரிவில் புதிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டதற்கு அங்கீகாரம்! | 3 |
| 4. | கழக மாவட்டங்கள் மறுசீரமைப்பிற்கு அங்கீகாரம்! | 4 |
| 5. | கழக இதயதெய்வம் அம்மா தொழிற்சங்கப் பேரவை மற்றும் அதன் கிளைச் சங்கங்கள், தொழிலாளர் நலத்துறையில் பதிவு செய்யப்பட்டதற்கு அங்கீகாரம்! | 5 |
| 6. | கழக பொதுச்செயலாளர், கழக தலைவர் மற்றும் கழக துணைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் குறித்த, தேர்தல் அதிகாரிகளின் முடிவைத் தனித் தீர்மானமாக நிறைவேற்றி இந்திய தேர்தல் ஆணையத்திற்கு முறைப்படி தெரியப்படுத்துவது தொடர்பான தீர்மானம்! | 6 |
| 7. | கழகத்தின் 6 ஆவது ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு கழக கொடியேற்றுதல், குக்கர் சின்னம் வரைந்து விளம்பரப்படுத்துதல், மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்குதல் மற்றும் விடியா தி.மு.க அரசின் மக்கள் விரோதப் போக்கினைக் கண்டித்து பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்! | 7 |


அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

| தீர்மானம் எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 8. | காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியை மேம்போக்காகக் கையாளும் தி.மு.க அரசிற்கு கண்டனம்! | 8-10 |
| 9. | தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத தி.மு.க அரசிற்கு கண்டனம்! | 11 |
| 10. | மக்கள் மீது பொருளாதார சுமையேற்றும் தி.மு.க அரசிற்கு கண்டனம்! | 12 |
| 11. | அமைச்சர்களின் ஆணவப் போக்கு, சட்டம்–ஒழுங்கு சீரழிவு, பேராபத்தில் தமிழக உரிமைகள் – அக்கறையற்ற தி.மு.க அரசிற்கு கண்டனம்! | 13-14 |
| 12. | பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை மற்றும் சுங்கக் கட்டணத்தைக் குறைத்திட மத்திய அரசுக்கு வலியுறுத்தல் | 15 |
| 13. | மணிப்பூர் கலவரத்தை முடிவுக்கு கொண்டுவந்து அமைதியை நிலைநாட்டிட மத்திய அரசுக்கு வலியுறுத்தல்! | 16 |
| 14. | விவசாயத்தைப் பாதிக்கும் பரந்தூர் விமான நிலையத் திட்டத்தையும், என்.எல்.சி சுரங்க விரிவாக்கத் திட்டத்தையும் கைவிடுக! | 17-18 |


அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 1

பகலவனாய் பிரகாசித்து பகுத்தறிவைப் பரப்பிய தந்தை பெரியார் அவர்களையும், அவர் பாசறையில் பயின்ற தமிழ்த்தாயின் பெருமகன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களையும் இப்பொதுக்குழு வணங்குகிறது.

அறிஞர் அண்ணாவின் இதயக்கனியாகத் திகழ்ந்து, மக்கள் திலகமாக உயர்ந்து, ஏழை–எளியோர் நலனை முதன்மையாகக் கொண்டு மக்களின் பேரன்பைப் பெற்று நல்லாட்சி வழங்கிய பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையும், புரட்சித்தலைவர் காட்டிய பாதையில் பயணித்து இரும்புப் பெண்மணியாகத் திகழ்ந்து, அச்சுறுத்தல்கள் அனைத்தையும் எதிர்கொண்டு மக்களின் அன்பைப் பெற்று நல்லாட்சி வழங்குவதில் உலகிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களையும் இக்கூட்டம் போற்றி வணங்குகிறது.

நம் அன்பில் நிறைந்த மகத்தான தலைவர்கள் கொண்டிருந்த லட்சியங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டர்களாக என்றும் பயணித்திடுவோம் என இப்பொதுக்குழு சூளுரைக்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.C.சண்முகவேலு** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர்,<br>திருப்பூர் புறநகர் மாவட்ட கழக செயலாளர்,<br>முன்னாள் அமைச்சர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 2

மாண்புமிகு அம்மா அவர்கள் முன்னெடுத்த மக்கள் நலக்கொள்கைகளை மக்கள் செல்வர் திரு.டிடிவி தினகரன் அவர்களால்தான் தொடர்ந்து செயல்படுத்த முடியும் என தீர்மானித்த, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டர்களின் உள்ள வெளிப்பாடாய் விளைந்த இயக்கம்தான் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்.

சோதனைகள், சதிகள், துரோகங்கள் என எத்தனையோ இன்னல்கள் வந்தபோதும் அனைத்தையும் தாண்டி அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தை வழிநடத்தி, களங்கள் பல கண்டு, 6–ஆவது ஆண்டில் கழகத்தை வழிநடத்தி, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கழகத்தை அமைப்பு ரீதியாக வலுப்படுத்தி, தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரலுயர்த்தி, விவசாயத்தைப் பாதுகாக்க தனிக்கவனம் செலுத்தி, தமிழக மக்களைப் பாதிக்கும் அத்தனை பிரச்சனைகளுக்கும் தொடர்ந்து போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு, நம் அம்மா அவர்களின் வழியில் தமிழக மக்களுக்கான இயக்கமாக கழகத்தைக் கட்டியெழுப்பி வரும் கழக பொதுச்செயலாளர் மக்கள் செல்வர் திரு.டிடிவி தினகரன் அவர்களுக்கு இப்பொதுக்குழு தனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.M.ரெங்கசாமி** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர்,<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்,<br>தஞ்சாவூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை - 600 014 ★ தலைமைக் கழகம்

# தீர்மானம் - 3

இந்தியாவின் எதிர்காலமான மாணவர்களின் மத்தியில் தூய்மையான புரட்சிகர அரசியலை மேலும் தீவிரமாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாணவர் அணி, "கழக மாணவர் அணி" மற்றும் "கழக மாணவியர் அணி" என இரு சார்பு அணிகளாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், உலக அரங்கில் வளர்ந்து வரும் நாடுகளின் வளர்ச்சியை தீர்மானிக்கக்கூடிய சக்தியாகவும், அந்நாட்டு ஆளுமையின் அங்கமாகவும் தமிழர்கள் திகழ்ந்து வருகிறார்கள். அவ்வாறு புலம்பெயர்ந்த அன்பிற்கினிய தமிழர்கள், நம் கழகத்தின் மீது பற்று கொண்டு அவர்கள் வாழ்ந்துவரும் நாடுகளில் கழக அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, முதற்கட்டமாக "ஐக்கிய அரபு அமீரக மண்டலம்" மற்றும் "ஐக்கிய அரபு குவைத் மண்டலம்" என கழக பொதுச்செயலாளர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

கழக பொதுச்செயலாளர் அவர்களால் கழக மாணவர் அணி, கழக மாணவியர் அணி மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலப்பிரிவில் ஐக்கிய அரபு அமீரக மண்டலம், ஐக்கிய அரபு குவைத் மண்டலம் என்று உருவாக்கப்பட்டதை இப்பொதுக்குழு அங்கீகரிக்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.G.செந்தமிழன்** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர், கழக செய்தி தொடர்பாளர்,<br>தென்சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்,<br>முன்னாள் அமைச்சர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 4

கழக சட்ட விதிகளின்படி நடைபெறும் இப்பொதுக்குழு, கழகத்தின் விதி 9 பிரிவு 1–ன் படி 94 கழக மாவட்டங்களில் கோவை கிழக்கு, கோவை மேற்கு, கோவை மத்தியம், கோவை வடக்கு, கோவை தெற்கு, விழுப்புரம் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, திருநெல்வேலி மாநகர் வடக்கு, திருநெல்வேலி மாநகர் தெற்கு ஆகிய கழக மாவட்டங்கள் முறையே, கோவை மாநகர், கோவை வடக்கு, கோவை தெற்கு, விழுப்புரம் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, திருநெல்வேலி மாநகர், திருநெல்வேலி புறநகர் கிழக்கு, திருநெல்வேலி புறநகர் மேற்கு என மறுசீரமைக்கப்பட்டு அறிவித்ததை ஒருமனதாக அங்கீகரிக்கிறது.

மேலும், 06.08.2023–க்கு முன்பாக வெவ்வேறு காலக்கட்டங்களில், பல்வேறு பொறுப்புகளில் இருந்த நிர்வாகிகள் மீது கழக பொதுச்செயலாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளையும், கழக பொறுப்புகளுக்கு கழக பொதுச்செயலாளர் அவர்களால் செய்யப்பட்ட மாறுதல்களையும் மற்றும் புதிய நியமனங்களையும் இப்பொதுக்குழு அங்கீகரிக்கிறது.

| | |
|---|---|
| முன்மொழிபவர் | **திரு.S.V.S.P.மாணிக்கராஜா** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர்,<br>கயத்தாறு ஒன்றியக் குழு பெருந்தலைவர் |
| வழிமொழிபவர்கள் | அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
★ சென்னை - 600 014 ★

# தீர்மானம் - 5

உழைப்பவரே உயர்ந்தவர் என்ற சிறந்த தத்துவத்தைக் கொண்டிருந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் பயணித்து, தொழிலாளர்களின் மேன்மைக்காக பல்வேறு நன்மைகளைப் பெற்றுத் தந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருப்பெயரில் இயங்கும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இதயதெய்வம் அம்மா தொழிற்சங்கப் பேரவை தற்போது, தொழிற்சங்கங்கள் சட்டம் 1926 (THE TRADE UNIONS ACT, 1926)இன் படி TNCHEJCL1CHETU-50-23-00050 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அதன் கிளைச் சங்கங்களான போக்குவரத்து தொழிலாளர்கள் இதயதெய்வம் அம்மா தொழிற்சங்கம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக (TASMAC) தொழிலாளர்கள் இதயதெய்வம் அம்மா தொழிற்சங்கம், மின்வாரிய தொழிலாளர்கள் – நிர்வாக பணியாளர்கள் இதயதெய்வம் அம்மா தொழிற்சங்கம், தோட்ட தொழிலாளர்கள் ( தேயிலை) இதயதெய்வம் அம்மா தொழிற்சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களும், தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறையில் பதிவு செய்யப்பட்டதற்கு இப்பொதுக்குழு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து, இப்பதிவுகளை அங்கீகரிக்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **வீரபாண்டி திரு.S.K.செல்வம்** அவர்கள்,<br>கழக பொருளாளர்,<br>சேலம் மத்தியம் மாவட்ட கழக செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

# தீர்மானம் - 6

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மக்கள் நலக்கொள்கைகளை இதயத்தில் ஏந்தி செயல்படும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தொடர்ந்து தமிழகம் முழுவதும் தனது கிளைகளைப் பரப்பி, நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தி, மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டு, மக்கள் நலனுக்காகப் போராடி பல்வேறு களங்களைச் சந்தித்து சவால்கள் அத்தனையும் தாண்டி, 6–ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்து பயணித்து வருகிறது. இந்த எழுச்சி பயணத்திற்கு உறுதுணையாக இருந்துவரும் கழகத்தின் அனைத்து நிலையிலான நிர்வாகிகளுக்கும், கழக தொண்டர்களுக்கும் இப்பொதுக்குழு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், 20.06.2023 அன்று நடைபெற்ற கழக செயற்குழுவில் கழக பொதுச்செயலாளர், கழக தலைவர் மற்றும் கழக துணைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கு, கழக சட்ட விதிகளின்படி தேர்தல் நடத்திட தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக கழக பொதுச்செயலாளர் அவர்களை விரைந்து பொதுக்குழுவைக் கூட்டிட வலியுறுத்தியதன்படி 06.08.2023 ஆகிய இன்று பொதுக்குழு கூட்டம் நடைபெற்று வருகிறது.

இப்பொதுக்குழுவில் கழக பொதுச்செயலாளர், கழக தலைவர் மற்றும் கழக துணைத்தலைவர் ஆகிய பதவிகளுக்கான தேர்தல் குறித்த, தேர்தல் அதிகாரிகளின் முடிவைத் தனித் தீர்மானமாக நிறைவேற்றி இந்திய தேர்தல் ஆணையத்திற்கு முறைப்படி தெரியப்படுத்துவது என இப்பொதுக்குழு முடிவு செய்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.இ.மகேந்திரன்** அவர்கள்,<br>கழக தலைமை நிலைய செயலாளர்,<br>மதுரை புறநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை – 600 014

# தீர்மானம் - 7

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மக்கள் நலக்கொள்கைகளை இதயத்தில் ஏந்தியும், அம்மா அவர்களின் திருவுருவத்தைக் கொடியில் தாங்கியும் செயல்பட்டு வரும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், 6 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இதனைக் கொண்டாடும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட, மாநகராட்சி, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை என பட்டிதொட்டியெங்கும் கழகக் கொடி பட்டொளி வீசி பறந்திடும் வகையில் கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சிகளை நடத்துவது மற்றும் நமது சின்னமான குக்கர் சின்னத்தை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பது, ஏழை–எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவது போன்ற நிகழ்ச்சிகளை ஆண்டு முழுவதும் நடத்திடுவது என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

மேலும், விடியா தி.மு.க அரசின் மக்கள் விரோதப் போக்கினை எடுத்துரைக்கும் வகையில் பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், திண்ணைப் பிரச்சாரங்கள், தெருமுனைக் கூட்டங்கள், இணையதள பிரச்சாரங்கள் நடத்திடுவது எனவும், மக்கள் நலன் சார்ந்த போராட்டங்களை முன்னெடுப்பது எனவும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **செல்வி.C.R.சரஸ்வதி** அவர்கள்,<br>கழக கொள்கை பரப்பு செயலாளர்,<br>செய்தி தொடர்பாளர்,<br>முன்னாள் வாரியத் தலைவர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை - 600 014 ★ தலைமைக் கழகம்

## தீர்மானம் - 8

தி.மு.க ஆட்சிக்கு வரும்போதெல்லாம் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து மாநில உரிமைகளை விட்டுக்கொடுப்பதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளது. தற்போதும் தமிழகத்தின் ஜீவாதாரமான காவிரியின் உரிமை மிகப்பெரிய அச்சுறுத்தலில் உள்ளது.

தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியும், 28 லட்சம் ஏக்கர் சாகுபடியும், 40 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பும் காவிரியை நம்பித்தான் இருக்கிறது.

மேலும், தமிழ்நாட்டின் 20 மாவட்டங்களில் கோடிக்கணக்கான மக்களின் குடிநீர் தேவையை பல தலைமுறைகளாக காவிரி வழங்கி வருகிறது.

காவிரியின் உரிமை தொடர்பாக பல நீண்ட சட்டப் போராட்டங்கள் நடந்த வண்ணம் இருந்த நிலையில், காவிரியின் உரிமைக்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தீவிரமாக முன்னெடுத்து வெற்றி கண்ட சட்டப் போராட்டங்களையும் அறவழிப் போராட்டங்களையும் இப்பொதுக்குழு நன்றியோடு நினைத்துப் பார்க்கிறது.

காவிரி நீர்ப் பங்கீடு விவகாரத்தில் பல கட்ட சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு 2018–இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், அந்த தீர்ப்பை மதிக்காமல் கர்நாடக அரசு, தமிழத்திற்குக் கொடுக்க வேண்டிய நீரின் அளவைச் சரிவர கொடுக்காததோடு, 9 ஆயிரம் கோடி செலவில் 4995 ஹெக்டேரில் 67.14 டி.எம்.சி தண்ணீரைத் தேக்குவதற்கு மேகதாதுவில்

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

அணை கட்டும் முயற்சியைத் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு முரணாக மாதாந்திர தண்ணீரைத் தர மறுப்பதோடு, புதிய அணை கட்டும் திட்டத்தை முன்னெடுக்கும் கர்நாடக அரசிற்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

கர்நாடகத்தில் ஆளுங்கட்சிகள் மாறினாலும் காவிரி விஷயத்தில் அவர்களின் நிலைப்பாடு ஒன்றாகத்தான் உள்ளது. காங்கிரஸ் கட்சியின் பதவியேற்பு விழாவிற்கு நேரில் சென்று வாழ்த்து மழை பொழிந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மேகதாது அணை தொடர்பாக ஒரு வார்த்தைகூட பேசாமல் திரும்பி வந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, பெங்களூரில் நடைபெற்ற தி.மு.க கூட்டணி கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டு தேர்தல் கூட்டணியை மட்டும் உறுதிப்படுத்திவிட்டு, தமிழகத்தின் எதிர்காலத்தை உறுதிப் படுத்தாமல் வந்துவிட்டார்.

மேகதாது அணைத் திட்டத்தில் கர்நாடகத்தின் முன்னெடுப்பைத் தடுக்கவும் முடியவில்லை, மாதாந்திர தண்ணீரின் அளவை பெறவும் முடியவில்லை. இது தி.மு.க.வின் இயலாமையையும், காவிரி உரிமை பெரும் ஆபத்தில் உள்ளது என்பதையும்தான் எடுத்துக்காட்டுகிறது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்று பெருமிதம் பேசாமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுப்பது, நீதிமன்றங்களில் மிகச் சரியான மற்றும் கூர்மையான வாதங்களை எடுத்துரைப்பது, காங்கிரஸ்–தி.மு.க கூட்டணி என்ற தனது தோழமையைப் பயன்படுத்தி தமிழகத்தின் எதிர்காலத்தைக் காப்பது என இவை எதையும் செய்யாமல், வெறும் சம்பிரதாய எதிர்ப்பு நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ளும் தி.மு.க அரசிற்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, தமிழகத்தின் நியாயத்தை உணர்ந்து மத்திய அரசு உரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **திரு.D.K.ராஜேந்திரன்** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர்,<br>தருமபுரி மாவட்ட கழக செயலாளர்<br><br>**அரூர் திரு.R.R.முருகன்** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்<br><br>**திரு.M.P.சம்பத்** அவர்கள்,<br>கர்நாடக மாநில கழக செயலாளர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை - 600 014 ★
தலைமைக் கழகம்

## தீர்மானம் - 9

தி.மு.க தனது 2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, தற்போது ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், அளித்த வாக்குறுதிகளை வசதியாக மறந்துவிட்டு, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வருகிறது. அனைத்துக் குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் ரூ.1000 உரிமைத்தொகை என்பதை அறிவித்துவிட்டு தற்போது, தகுதியுடையவர்களுக்கு மட்டும் என்று கூறி மக்களை ஏமாற்றுகிறது.

சிலிண்டருக்கு ரூ.100 மானியம், பெட்ரோல் விலையில் ரூ.5 குறைப்பு, நீட் தேர்வு ரத்து, அரசுத் துறைகளில் 5.50 லட்சம் வேலை வாய்ப்பு, மின் கட்டணம் ஒவ்வொரு மாதமும் கணக்கிடும் முறையை அமல்படுத்துவது, தனியார் துறையிலும் இடஒதுக்கீடு, பழைய ஓய்வூதியத் திட்டம், பால் விலை குறைப்பு, நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2500 ஆகவும் மற்றும் கரும்புக்கான குறைந்தபட்ச ஆதார விலை ரூ.4000 வழங்கப்படும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, தற்போது அவற்றை நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றும் வஞ்சக தி.மு.க அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.ம.கரிகாலன்** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர்,<br>கழக பொறியாளர் அணி செயலாளர்,<br>செங்கல்பட்டு வடக்கு மாவட்ட கழக செயலாளர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 10

பொய்யான தேர்தல் வாக்குறுதிகளைச் சொல்லி ஆட்சிக்கு வந்த தி.மு.க தொடர்ந்து மக்கள் தலையில் பொருளாதார சுமையேற்றி வருகின்றது.

தமிழகத்தின் பொருளாதாரத்தை சீர்படுத்தவும், கடன் சுமையைக் குறைக்கவும் எங்களுக்குத் தெரியும் எனவும், அதனால் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம் என்றும் தேர்தல் அறிக்கையில் தெரிவித்துவிட்டு, இரண்டு ஆண்டுகளாகியும், சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அதற்கு நேர் எதிரான நிலைப்பாட்டை எடுத்து மக்களை வஞ்சிக்கும் வகையில் சொத்து வரியை 150% வரை உயர்த்தியுள்ளது.

பால் விலை உயர்வு, ஆவினில் பால் பொருட்களின் விலை உயர்வு, மறைமுகப் பேருந்துக் கட்டண உயர்வு, மின்சாரக் கட்டண உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு, நில வழிகாட்டு மதிப்பீடு உயர்வு என அடுத்தடுத்து மக்கள் மீது பொருளாதாரத் தாக்குதல்களை நடத்தும் விடியா தி.மு.க அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **திரு.K.பாண்டுரங்கன்** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர், முன்னாள் அமைச்சர்<br><br>**திரு.K.P.நல்லசாமி** அவர்கள்,<br>திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்,<br>திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

# தீர்மானம் - 11

திி.மு.க எப்போது ஆட்சிக்கு வந்தாலும் சட்டம்–ஒழுங்கிற்கும், மக்களின் அமைதி வாழ்க்கைக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவது கடந்த கால வரலாறு. இப்போதும், அந்த வரலாறு தொடர்கிறது.

தமிழகத்தில் அதிகரிக்கும் கொலைக் குற்றங்கள், சங்கிலிப் பறிப்புச் சம்பவங்கள், இணையதள குற்றங்கள், மணல் கொள்ளை, சட்டப்படி கடமையாற்றும் அரசு ஊழியர்கள் மீது நடத்தப்படும் கொலை வெறித்தாக்குதல்கள், கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்களின் தாராளப் புழக்கம், ஆளும் கட்சியினரின் தூண்டுதலால் தலைதூக்கும் தீண்டாமை பெருங்குற்றம் என அதிர்ச்சியளிக்கும் சம்பவங்கள் தமிழகத்தில் தொடர்ந்து அரங்கேறி வருகின்றது.

கோடநாடு கொலை கொள்ளை, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை போராட்டக்குழுவினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு, பொள்ளாச்சி பாலியல் விவகாரம் போன்று தமிழகத்தை உலுக்கிய குற்றங்களில், சட்ட ரீதியான தண்டனை பெற்றுத்தரும் முயற்சியில் தி.மு.க அரசு மெத்தனப்போக்கை மேற்கொள்கிறது.

விடியா தி.மு.க அரசில் மக்கள் நலன் என்பது முற்றிலுமாக மறக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. மக்கள் சேவைக்காக பணியாற்ற வேண்டிய அமைச்சர்கள், தங்களை வளப்படுத்திக்கொள்வது தொடர்பாகவும், அவர்களின் துறைகளில் நடைபெறும் ஊழல் குறித்தும் வெளியாகும் செய்திகளும் அதிர்ச்சியளிக்கிறது. மக்களிடம் அடாவடிப் போக்கையும் ஆணவப் பேச்சையும்

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

தொடர்ச்சியாக மேற்கொள்ளும் அமைச்சர்களையும், ஆளும் கட்சியினரின் அராஜகத்தையும் கண்டிக்க முடியாத நிலையில் முதலமைச்சர் உள்ளார்.

மேலும், வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் விளை நிலங்களைத் தாரை வார்ப்பது, சுற்றுச்சூழலை அழிப்பது, தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளை விட்டுக்கொடுப்பது போன்ற நிர்வாக சீர்கேடான ஆட்சியை நடத்தி, பலதரப்பட்ட மக்களைப் பாதிப்படையச் செய்யும் மக்கள் விரோத தி.மு.க அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **டாக்டர் K.கதிர்காமு** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்<br><br>**திரு.R.சுந்தரராஜ்** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014 ★

# தீர்மானம் - 12

மக்களின் அன்றாட வாழ்க்கை இயக்கத்திற்கு அடிப்படையாகிவிட்ட பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையால் ஒவ்வொரு வீட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் நிறுவனங்களே விலையை நிர்ணயித்துக் கொள்ளலாம் என முன்னர் தி.மு.க அங்கம் வகித்த காங்கிரஸ் ஆட்சி எடுத்த முடிவினை மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

மக்கள் நலனை மனதில் கொண்டு இதில் மாற்றம் செய்து, பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை மீண்டும் அரசின் கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்து அவற்றின் விலையைக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

மேலும், 60 கிலோ மீட்டருக்கு ஒரு சுங்கச்சாவடிதான் இருக்க வேண்டும் என்பதே விதிமுறை. ஆனால், தமிழகத்திலுள்ள சுங்கச்சாவடிகளில் பல இவ்விதிமுறையைப் பின்பற்றாமல் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றை அடையாளம் கண்டு, நிரந்தரமாக அகற்ற வேண்டும்.

தமிழகத்தில் பெருகிவரும் வாகன எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சுங்கச் சாவடிகளின் கட்டணத்தைக் குறைத்திடவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனோடு சேர்த்து மாநில அரசு அமைத்துள்ள சுங்கச் சாவடிகளையும் முழுமையாக அகற்ற வேண்டும் என இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **திரு.M.கோதண்டபாணி** அவர்கள்,<br>செங்கல்பட்டு தெற்கு மாவட்டக் கழக செயலாளர்,<br>கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்<br><br>**திரு.T.A.ஏழுமலை** அவர்கள்,<br>திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 13

மணிப்பூர் மாநிலத்தில் இரு வேறு இனக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலும், அதன் விளைவுகளும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு கொடூரமாக உள்ளது.

அந்த வன்முறைகளின் ஒரு நிகழ்வாக இரு பெண்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமை நமது நெஞ்சங்களை பதைபதைக்க வைக்கிறது. நாகரிகத்திலும் , தொழில்நுட்பத்திலும் உலகம் முன்னேறி வரும் நிலையில், இதுபோன்ற பிற்போக்கான செயல்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யும் கடமை ஜனநாயகத்தின் மீது நம்பிக்கைகொண்ட எல்லோருக்கும் உள்ளது.

இந்தக் கொடூரச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு தகுந்த தண்டனையைப் பெற்றுத் தரவும், வன்முறை தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும், மணிப்பூர் மாநிலத்தில் நடைபெறும் இம்மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து, அம்மாநிலத்தில் மீண்டும் முழுமையான அமைதி நிலவுவதையும், வன்முறையால் உயிரிழந்த மக்களுக்கும், வீடு, உடைமைகளை இழந்தவர்களுக்கும் உரிய நிவாரணம் கிடைப்பதையும் மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **திருமதி.வளர்மதி ஜெபராஜ்** அவர்கள்,<br>கழக மகளிர் அணி செயலாளர்,<br>முன்னாள் அமைச்சர்<br><br>**திருமதி.சாருபாலா.R.தொண்டைமான்** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர்,<br>முன்னாள் மேயர்<br><br>**திருமதி.A.விசாலாட்சி** அவர்கள்,<br>திருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளர்,<br>கழக தேர்தல் பிரிவு துணை செயலாளர்,<br>முன்னாள் மேயர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 14

விவசாயம் என்பது நமது வாழ்க்கை முறை. அறிவியல் எவ்வளவு வளர்ந்தாலும், எவ்வளவு மாற்றங்களைக் கொண்டு வந்தாலும் நெல்லுக்கும் மண்ணுக்கும் மாற்று இல்லை. உண்ணும் உணவுக்கும் மாற்று இல்லை. அதனால்தான் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர்,

*சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை*

என்றார்கள். இதனை உணர்ந்துதான் மண்ணுக்குக் கீழே வைரமே கிடைத்தாலும் வேண்டாம். விவசாயம்தான் வேண்டும் என்று உரக்க குரல் கொடுத்து வருகிறது அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம். ஆனால், வேளாண்மையை அழிக்கும் பல திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன.

தி.மு.க ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் அரசு திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்படும் போது, விவசாயிகளின் ஒப்புதல் பெற்று செயல்படுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தனர். ஆனால், இன்று அந்த வாக்குறுதிக்கு எதிரான நிலைப்பாட்டையே தி.மு.க அரசு எடுத்து வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், பரந்தூரில் விமான நிலையம் அமைக்க 4,500 ஏக்கர் நெல் விளையும் நிலமும், நீர் நிலைகளும் கையகப்படுத்தப்படுகின்றது. இதனால் நெல் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது. 85 ஏரிகளை நிரப்பும் கம்பன் கால்வாய் முற்றிலும் அழிக்கப்படவிருக்கிறது. 13 கிராமங்கள் பாதிக்கப்பட்டு, இதில் ஏகனாபுரம் கிராமம் இந்திய வரைபடத்திலிருந்தே அழிக்கப்படும் சூழல் ஏற்படும்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை - 600 014 ★ தலைமைக் கழகம்

சென்னை விமான நிலையத்தில் பயணிப்போரின் நெரிசலைக் குறைத்திட இத்திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்கிறது தி.மு.க அரசு. இதற்கு மாற்று வழிகள் பல இருக்கும்போது, விளை நிலங்களை அழிப்பது அநீதி.

மேலும், விளை நிலங்களை விழுங்கி வரும் என்.எல்.சி.யின் விரிவாக்கப் பணிக்கு விவசாயிகள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், கடலூர் மாவட்டம், பரவனாறு பகுதியில் மாற்றுப்பாதை அமைக்கும் என்.எல்.சி.யின் திட்டத்தை எதிர்க்கும் அம்மக்களின் ஜனநாயகப் பூர்வமான எதிர்ப்பை காவல்துறையை வைத்து முடக்குகிறது தி.மு.க அரசு.

விளை நிலங்களை அழித்து விட்டு வளர்ச்சியடைய நினைப்பது கண்களை விற்று ஓவியம் வாங்குவதற்குச் சமம். இதனை உணராமல் என்.எல்.சி.யின் விரிவாக்கப் பணிக்கு தி.மு.க அரசு துணை நிற்கிறது.

மக்களுக்காகத்தான் திட்டங்களே தவிர, திட்டங்களுக்காக மக்கள் இல்லை. அப்பகுதி மக்களின் உணர்வுகளை உதாசீணப்படுத்தும் தி.மு.க.விற்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, பரந்தூரில் விமான நிலையம் அமைக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும் எனவும், என்.எல்.சி விரிவாக்கப் பணிகளை தடுத்து மின்சாரம் தயாரிக்க மாற்று வழிமுறைகளை செயல்படுத்த வேண்டும் எனவும் தி.மு.க அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.M.S.சங்கர் (எ) சிவசங்கர்** அவர்கள்,<br>கழக விவசாயப் பிரிவு செயலாளர்<br>மற்றும் கழக விவசாயப் பிரிவின்<br>அனைத்து நிலை நிர்வாகிகளும் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014 ★

# இரங்கல் தீர்மானம்

ஒடிசா மாநிலம், பாலசோரில் நடந்த ரயில் விபத்தில் உயிரிழந்த 200க்கும் மேற்பட்டோர், கேரள முன்னாள் முதலமைச்சரும், முதுபெரும் காங்கிரஸ் தலைவருமான திரு.உம்மன் சாண்டி அவர்கள், உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாடி கட்சியின் நிறுவனருமான திரு.முலாயம் சிங் யாதவ் அவர்கள், வசீகரக் குரலால் இதயங்களைக் கவர்ந்த பிரபலப் பின்னணி பாடகி பத்ம பூஷண் வாணி ஜெயராம் அவர்கள், புகழ்பெற்ற வில்லிசைக் கலைஞர் பத்மஸ்ரீ திரு.சுப்பு ஆறுமுகம் அவர்கள், சிறந்த கல்வியாளரும், தமிழ் மொழி பற்றாளரும், ஆன்மீக வாதியும், பாரம்பரிய மதுரை தியாகராஜர் கல்வி நிறுவனங்களின் தாளாளருமான திரு.கருமுத்துக் கண்ணன் அவர்கள், தமிழறிஞரும் சிறந்த சொற்பொழிவாளருமான திரு.நெல்லை கண்ணன் அவர்கள், தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் நடித்த பிரபல நடிகர் சரத்பாபு அவர்கள், புரட்சித்தலைவர் மீது பெரும் பற்றுதல் கொண்ட பிரபல நகைச்சுவை நடிகர் திரு.மயில்சாமி அவர்கள், நடிகரும் இயக்குநருமான திரு.மனோ பாலா அவர்கள் உட்பட கடந்த ஓர் ஆண்டு காலத்தில் மறைந்த பல்வேறு பிரமுகர்களுக்கு இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டர்களின் எண்ண வெளிப்பாடாக உருவாக்கப்பட்ட அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் விவசாயப் பிரிவு செயலாளரும், தமிழக முன்னாள் அரசு கொறடாவுமான திரு.துரை.கோவிந்தராஜன் அவர்கள், கழக அமைப்பு செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு.கு.சீனிவாசன் அவர்கள் மற்றும் கழகத்திலும், சார்பு அணிகளிலும் பல்வேறு நிலைகளில் பொறுப்பு வகித்து, கழகம் காத்து, உடல்நலக்குறைவாலும், சாலை விபத்துகளாலும் உயிரிழந்த கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த இரங்கலைச் சமர்ப்பிக்கிறது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014.

| வ. எண் | பெயர் மற்றும் பொறுப்பு |
|---|---|
| 1 | **திரு. ஆம்பல் ஆர்.ஆர்.ராஜமோகன்**<br>கழக வழக்கறிஞர் பிரிவு துணைச்செயலாளர் |
| 2 | **திரு.வேங்கை கணேசன்**<br>முன்னாள் இதயதெய்வம் அம்மா தொழிற்சங்க பேரவை துணைச்செயலாளர் |
| 3 | **சேவல் திரு.P.கோதண்டன்**<br>மாவட்டக் கழக அவைத்தலைவர், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் |
| 4 | **தாசில்தார் திரு.V.ராஜா**<br>திட்டக்குடி சட்டமன்ற தொகுதி பொதுக்குழு உறுப்பினர், கடலூர் வடக்கு மாவட்டம் |
| 5 | **திருமதி.சரோஜினி சீனிவாசன்**<br>விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி பொதுக்குழு உறுப்பினர்,<br>தென்சென்னை வடக்கு மாவட்டம் |
| 6 | **திரு.S.புருஷோத்தமன்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர், ராணிப்பேட்டை மாவட்டம் |
| 7 | **மேப்பல் திரு.A.M.ராஜேந்திரன்**<br>மாவட்ட இதயதெய்வம் அம்மா பேரவை செயலாளர், சிவகங்கை மாவட்டம் |
| 8 | **திரு.S.சம்பத்குமார்**<br>மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் |
| 9 | **திரு.D.முருகேசன்**<br>மாவட்ட விவசாயப் பிரிவு தலைவர், மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 10 | **திரு.K.பாலசுப்ரமணியம்**<br>மாவட்ட விவசாயப் பிரிவு செயலாளர், கோவை வடக்கு மாவட்டம் |
| 11 | **திரு.M.பவுன்துரை**<br>மாவட்ட இலக்கிய அணி செயலாளர், தேனி வடக்கு மாவட்டம் |
| 12 | **திரு.R.சிவசுப்ரமணியன்**<br>மாவட்ட இலக்கிய அணி செயலாளர், கரூர் மேற்கு மாவட்டம் |
| 13 | **திரு.R.சீனிவாசன் (எ) அருண்**<br>மாவட்ட இலக்கிய அணி செயலாளர், வேலூர் புறநகர் மாவட்டம் |
| 14 | **திரு.தீர்த்தகிரி**<br>மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஆண்கள் பிரிவு செயலாளர், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் |
| 15 | **திரு.N.நயினா முகமது**<br>மாவட்ட வெளிநாடு வாழ் தமிழர் நலப்பிரிவு செயலாளர், தூத்துக்குடி தெற்கு மாவட்டம் |
| 16 | **திரு.B.குலாம்அலி**<br>மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு |
| 17 | **திரு.S.K.துரைராஜ்**<br>வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர், தென்சென்னை தெற்கு மாவட்டம் |
| 18 | **திரு.A.சக்கரை**<br>திருப்பரங்குன்றம் 1ஆம் பகுதி செயலாளர், மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 19 | **திரு.K.கிருஷ்ணசாமி**<br>பிரையண்ட் நகர் பகுதிக் கழக செயலாளர், தூத்துக்குடி மாநகர் மாவட்டம் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
★ சென்னை - 600 014 ★

| | |
|---|---|
| 20 | **திரு.A.மலைச்சாமி**<br>கம்பம் ஒன்றியக் கழக செயலாளர், தேனி வடக்கு மாவட்டம் |
| 21 | **திரு.S.P.செல்வக்குமார்**<br>செந்துறை வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் பெரம்பலூர் மாவட்டம் |
| 22 | **திரு.V.நடராஜன்**<br>திருத்துறைப்பூண்டி நகரக் கழக செயலாளர், திருவாரூர் மாவட்டம் |
| 23 | **திரு.M.சையத் இப்ராஹிம்**<br>தேன்கனிக்கோட்டை பேரூர் கழக செயலாளர், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் |
| 24 | **திரு.C.கனகராஜ்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மன்றத் தலைவர் வடசென்னை மத்திய மாவட்டம் |
| 25 | **திரு.ரங்கநாதன்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மன்ற துணைத்தலைவர் கோவை வடக்கு மாவட்டம் |
| 26 | **திரு.P.சுந்தரம்**<br>மாவட்ட இதயதெய்வம் அம்மா பேரவை தலைவர் விருதுநகர் மேற்கு மாவட்டம் |
| 27 | **திரு.K.Y.சுரேஷ்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் இளைஞர் அணி பொருளாளர்<br>தென்சென்னை தெற்கு மாவட்டம் |
| 28 | **திரு.M.கஜேந்திரன்**<br>மாவட்ட மாணவர் அணி துணைச்செயலாளர், ஈரோடு மாநகர் கிழக்கு மாவட்டம் |
| 29 | **திரு.C.அஜய் கோஸ்**<br>மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச்செயலாளர் இராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் |
| 30 | **திரு.M.பஜீர் அலி**<br>மாவட்ட சிறுபான்மையினர் நலப்பிரிவு துணைச்செயலாளர் தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 31 | **திரு.M.வினோத்குமார்**<br>மாவட்ட பொறியாளர் அணி துணைச்செயலாளர், மதுரை புறநகர் வடக்கு மாவட்டம் |
| 32 | **திரு.மு.சுப்பையா**<br>கோட்டை பகுதி கழக பொருளாளர், தஞ்சாவூர் மாநகர் மாவட்டம் |
| 33 | **திரு.K.முத்து இருளாண்டி**<br>அவனியாபுரம் 1வது பகுதி கழக இணைச்செயலாளர், மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 34 | **திரு.D.பஞ்சசீலன் அவர்கள்**<br>பெரம்பூர் கிழக்கு பகுதி துணைச்செயலாளர், வடசென்னை மத்திய மாவட்டம் |
| 35 | **திரு.M.ராஜ்கமல்**<br>உறையூர் பகுதி 10A வது வட்ட கழக செயலாளர், திருச்சி மாநகர் மாவட்டம் |
| 36 | **திரு.N.விஸ்வநாதன்**<br>அம்மாபேட்டை மேற்கு பகுதி 43வது வட்ட கழக செயலாளர், சேலம் மத்திய மாவட்டம் |
| 37 | **திரு.S.ஆனந்தன்**<br>ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43வது மேற்கு வட்டக் கழக செயலாளர்<br>வடசென்னை மத்திய மாவட்டம் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை - 600 014 ★
தலைமைக் கழகம்

| | |
|---|---|
| 38 | **திரு.V.கஜேந்திரன்**<br>சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி 185வது வட்ட கழக செயலாளர்,<br>செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் |
| 39 | **திரு.K.கணேசன்**<br>பெரம்பூர் கிழக்கு பகுதி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மன்ற துணைத்தலைவர்<br>வடசென்னை மத்தியம் மாவட்டம் |
| 40 | **திரு.N.K.உமாசங்கர்**<br>ஆர்.கே.நகர் பகுதி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மன்ற துணைச்செயலாளர்<br>வடசென்னை மத்திய மாவட்டம் |
| 41 | **திரு.சுரேஷ்**<br>திருப்பரங்குன்றம் 2ஆம் பகுதி இளைஞர் பாசறை செயலாளர்,<br>மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 42 | **திரு.ஆர்.கோவிந்தராஜ்**<br>வில்லிவாக்கம் மேற்கு பகுதி 95வது மேற்கு வட்ட கழக துணைச்செயலாளர்<br>வடசென்னை மேற்கு மாவட்டம் |
| 43 | **திரு.J.பாலாஜி**<br>விருகம்பாக்கம் வடக்கு பகுதி, 128வது வட்டம், தென்சென்னை வடக்கு மாவட்டம் |
| 44 | **திரு.S.P.சீனிவாசன்**<br>காட்பாடி ஒன்றிய கழக அவைத்தலைவர், வேலூர் மாநகர் மாவட்டம் |
| 45 | **திரு.R.முத்தழகன்**<br>கண்டமங்கலம் தெற்கு ஒன்றிய கழக அவைத்தலைவர், விழுப்புரம் கிழக்கு மாவட்டம் |
| 46 | **திரு.S.ரமேஷ்**<br>திருப்புவனம் கிழக்கு ஒன்றியக் கழக பொருளாளர், சிவகங்கை மாவட்டம் |
| 47 | **திரு.பெ.ஆறுமுகம்**<br>விருதுநகர் மேற்கு ஒன்றிய கழக பொருளாளர், விருதுநகர் மத்திய மாவட்டம் |
| 48 | **திரு.V.மாணிக்கம்**<br>கண்ணங்குடி ஒன்றிய கழக துணைச்செயலாளர், சிவகங்கை மாவட்டம் |
| 49 | **திரு.A.பஷிர் அஹமது**<br>பாபநாசம் தெற்கு ஒன்றிய கழக துணைச்செயலாளர், தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 50 | **திரு.R.தண்டாயுதபாணி**<br>குன்றாண்டார்கோவில் மேற்கு ஒன்றிய கழக இணைச்செயலாளர்<br>புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் |
| 51 | **திரு.இராம.சேகரன்**<br>மேலூர் மேற்கு ஒன்றிய கழக இணைச்செயலாளர், மதுரை புறநகர் வடக்கு மாவட்டம் |
| 52 | **திரு.S.குப்புசாமி**<br>நாமகிரிப்பேட்டை மேற்கு ஒன்றிய கழக துணைச்செயலாளர், நாமக்கல் வடக்கு மாவட்டம் |
| 53 | **திரு.P.மகாதேவன்**<br>உத்தமபாளையம் வடக்கு ஒன்றிய கழக பொருளாளர், தேனி தெற்கு மாவட்டம் |
| 54 | **திரு.S.கோவிந்தராஜன்**<br>கூத்தாநல்லூர் நகர கழக பொருளாளர், திருவாரூர் மாவட்டம் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

| | |
|---|---|
| 55 | **திரு.S.நாகேந்திரன்**<br>பூந்தமல்லி நகர கழக மாவட்ட பிரதிநிதி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம் |
| 56 | **திரு.A.முத்தையா**<br>சின்னமனூர் நகர 6வது வார்டு கழக செயலாளர், தேனி தெற்கு மாவட்டம் |
| 57 | **திரு.M.காளிதாஸ்**<br>கூத்தாநல்லூர் நகர 1வது வார்டு கழக செயலாளர், திருவாரூர் மாவட்டம் |
| 58 | **திரு.V.சார்லஸ்**<br>பொன்னேரி நகர 4வது வார்டு கழக செயலாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் |
| 59 | **திரு.S.சதீஷ் (எ) சத்தியசீலன்**<br>பூந்தமல்லி நகர 5வது வார்டு கழக செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்டம் |
| 60 | **திரு.S.S.சிராஜ்தீன்**<br>மீஞ்சூர் பேரூர் கழக அவைத்தலைவர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் |
| 61 | **திரு.M.நூர்முகமது**<br>லப்பைகுடிகாடு பேரூர் கழக அவைத்தலைவர், பெரம்பலூர் மாவட்டம் |
| 62 | **திரு.K.ஆறுமுகம்**<br>ஆரணி பேரூர் கழக மாவட்ட பிரதிநிதி, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் |
| 63 | **திரு.K.குப்பன்**<br>கனிக்கனியான் ஊராட்சி கழக செயலாளர், கணியம்பாடி ஒன்றியம்,<br>ராணிப்பேட்டை மாவட்டம் |
| 64 | **திரு.R.கார்த்திகேயன்**<br>மல்லியங்குப்பம் ஊராட்சி கழக செயலாளர், சோழவரம் வடக்கு ஒன்றியம்,<br>திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் |
| 65 | **திரு.S.ஞானசம்பந்தம்**<br>வீரடிபட்டி ஊராட்சி கழக செயலாளர், கந்தர்வக்கோட்டை கிழக்கு ஒன்றியம்,<br>புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் |
| 66 | **திரு.கண்ணன்**<br>கொற்கை ஊராட்சி கழக செயலாளர், மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம்,<br>மயிலாடுதுறை மாவட்டம் |
| 67 | **திரு.ஏ.என்.சாலிபு**<br>கண்டியூர் ஊராட்சி கழக செயலாளர், திருவையாறு தெற்கு ஒன்றியம்,<br>தஞ்சாவூர் மாநகர் மாவட்டம் |
| 68 | **திரு.A.அம்மல்**<br>மணப்பாடு ஊராட்சி கழக செயலாளர், உடன்குடி ஒன்றியம், தூத்துக்குடி தெற்கு மாவட்டம் |
| 69 | **திரு.C.திருநாவுக்கரசு**<br>களஞ்சேரி ஊராட்சி கழக செயலாளர், அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம்,<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 70 | **திரு.V.சத்தியசீலன்**<br>பெரியநாயகிசத்திரம் ஊராட்சி கழக செயலாளர், மணிகண்டம் ஒன்றியம்,<br>திருச்சி மாநகர் மாவட்டம் |
| 71 | **திரு.M.கோவிந்தன்**<br>செட்டிக்கரை ஊராட்சி கழக செயலாளர், தருமபுரி கிழக்கு ஒன்றியம், தருமபுரி மாவட்டம் |

திராவிட முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

| | |
|---|---|
| 72 | **திரு.S.பன்னீர்செல்வம்**<br>தளிகைவிடுதி ஊராட்சி கழக செயலாளர், திருவோணம் ஒன்றியம்,<br>தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் |
| 73 | **திரு.B.கல்யாணராமன்**<br>திருவிடச்சேரி ஊராட்சி கழக செயலாளர், குடவாசல் தெற்கு ஒன்றியம்,<br>திருவாரூர் மாவட்டம் |
| 74 | **திரு.கணேசமூர்த்தி**<br>காந்தாவனம் கிளை கழக செயலாளர், எடவாக்குடி ஊராட்சி,<br>அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம், தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 75 | **திரு.R.சசிகுமார்**<br>ராராமுத்திரக்கோட்டை கிளை கழக செயலாளர், அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம்,<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 76 | **திரு.R.கார்த்திக்**<br>ஆற்றங்கரை தெரு கிளைக் கழக செயலாளர், பாபநாசம் தெற்கு ஒன்றியம்,<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 77 | **திரு.சிந்துபட்டி கணேசன்**<br>தனக்கன்குளம் கிளைக் கழக செயலாளர், திருப்பரங்குன்றம் மேற்கு ஒன்றியம்,<br>மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 78 | **திரு.மங்களேஸ்வரன்**<br>ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் |
| 79 | **மாண்புமிகு பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் தாயார் திருமதி.ஹீரா பென் மோடி** |
| 80 | உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாதி கட்சியின் நிறுவனருமான **திரு.முலாயம் சிங் யாதவ்** |
| 81 | புதுக்கோட்டை மன்னர் கழக அமைப்பு செயலாளர் **திருமதி.சாருபாலா R.தொண்டைமான் அவர்களின் மாமியார் ராணி திருமதி.ரமாதேவி** |
| 82 | **கோவை சரக டிஐஜி. திரு.விஜயக்குமார் ஐ.பி.எஸ்** |
| 83 | விகடன் குழும நிறுவனங்களின் தலைவர் திரு.பா. சீனிவாசன் அவர்களின் தாயார் **திருமதி.சரோஜா பாலசுப்பிரமணியம்** |
| 84 | திரைப்பட நடிகர் வடிவேலு அவர்களின் தாயார் **திருமதி.சரோஜினி** |
| 85 | சென்னை மழைநீர் வடிகால் பணிகளுக்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் விழுந்து உயிரிழந்த **புதிய தலைமுறை தொலைக்காட்சி செய்தியாளர் திரு. முத்துக்கிருஷ்ணன்** |
| 86 | தமிழ்நாடு சோழிய வேளாளர் சங்கத்தின் மாநிலத் தலைவரும், கி.ஆ.பெ.விசுவநாதம் பிள்ளை பள்ளியின் தலைவரும், திருச்சி G.V.N. மருத்துவனையின் தலைவருமான **திரு.V.ஜெயபால் பிள்ளை** |
| 87 | பேரழிப்பிற்கு எதிரான பேரியக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும், சூழலியல் அறிஞருமான **திரு.கே.கே.ஆர்.லெனின்** |
| 88 | தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு அருகே **கோவில்பத்து கிராம நிர்வாக அலுவலர் திரு.லூர்து பிரான்சிஸ்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

| | |
|---|---|
| 89 | பஞ்சாப் மாநிலம் பதிண்டா ராணுவ முகாமில் நடைபெற்ற**துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த ராணுவ வீரர்கள் யோகேஷ் குமார் மற்றும் கமலேஷ்** |
| 90 | அருணாசலப்பிரதேசத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த **தேனியை சேர்ந்த இராணுவ விமானி ஜெயந்த்** |
| 91 | அரசு மருத்துவமனையில் அளிக்கப்பட்ட தவறான சிகிச்சையால் உயிரிழந்தஇளம் **கால்பந்து வீராங்கனை செல்வி.பிரியா** |
| 92 | சேலம் மேட்டூர் அருகே அடிப்பாலாறு பகுதியில் மீன்பிடிக்கச் சென்றபோதுகர்நாடக வனத்துறையினரால் துப்பாக்கியால் சூடப்பட்ட தமிழ்நாட்டைசேர்ந்த **மீனவர் ராஜா** |
| 93 | இரயிலில் தள்ளி கொலை செய்யப்பட்ட சென்னையை சேர்ந்த**கல்லூரி மாணவி சத்யா** |
| 94 | வெளிநாடுகளில் மர்மமான முறையில் உயரிழந்த **திரு.முத்துக்குமரன் மற்றும் திரு.சின்னமுத்து புரவியான்** |
| 95 | கடலூர் மாவட்டம், பண்ருட்டி, மேல்பட்டாம்பாக்கம் பகுதியில் **தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் உயிரிழந்தோர்.** |
| 96 | காஞ்சிபுரம் அருகே குருவிமலை பகுதியில்**பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தோர்** |
| 97 | கிருஷ்ணகிரி மாவட்டம் பழைய பேட்டையில் உள்ள **பட்டாசு குடோனில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோர்** |
| 98 | காவிரி ஆற்றில் மூழ்கி உயிரிழந்த புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையைச் சேர்ந்த **லாவண்யா, இனியா, சோபியா, தமிழரசி** |
| 99 | சென்னை நங்கநல்லூர் தர்மலிங்கேஸ்வரர் கோயில் தீர்த்தவாரி நிகழ்வின் போது குளத்தில் மூழ்கி உயரிழந்த **அர்ச்சகர்கள் சூர்யா, ராகவன், யோகேஸ்வரன், ராகவன் மற்றும் பானேஷ்** |
| 100 | திருச்சி கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்கள்**விஷ்ணு பிரசாத், ஹரி பிரசாத், சூர்ய அபிராம்** |
| 101 | திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் **கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர்** |
| 102 | சிவகங்கை மாவட்டம், கண்ணங்கோட்டையில் கொலையில்உயிரிழந்த **தாய் கனகம் மற்றும் மகள் வேலுமதி** |
| 103 | **தமிழ்நாட்டில் ஆன்லைன் ரம்மி சூதாட்டத்தால் உயிரிழந்தோர்** |
| 104 | **தமிழகத்தில் கள்ளசாராயம் குடித்து பலியானோர்** |

**முன்மொழிபவர்கள்**

**திரு.U.C.ஆறுமுகம்** அவர்கள்,
புதுச்சேரி தெற்கு மாநில கழக செயலாளர்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.

**திரு.S.D.சேகர்** அவர்கள்,
புதுச்சேரி வடக்கு மாநில கழக செயலாளர்.

**வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை - 600 014 ★ தலைமைக் கழகம்